Rent for Buildings owned by Viruthagreeswarar Temple, Vridhachalam

* 146. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(*a*) whether a Fair Rent Committee has been constituted in the Hindu Religious and Charitable Endowments Department, to fix fair rent for the buildings owned by the temples ;

(*b*) the details of the guidelines given to the Committee ;

(c) whether this Committee consists of officials of the Hindu Religious and Charitable Endowments Department alone ; or includes officials belonging to other departments also ;

(*d*) whether representations have been received from the tenants of the Viruthagreeswarar Temple, Vridhachalam, regarding the excessive increase in rent notified by the Executive Officer of the temple, with effect from 1st January 1979 ; and

(e) the action taken thereon ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அவைமுன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான முறையீடுகளை 17—7—1980 அன்று விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிக்கையிலே குறிப்பு காணப்படுகிறது. இப்போது அறங்காவலர் வாடகையை நிர்ணயித்து அங்கீகரித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வாடகைதாரர்கள் அதைச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டுவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தப்படி வரவேண்டிய நிலுவைத் தொகையெல்லாம் வந்து சேர்ந்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்த விடை இந்த வினா எழுப்பப்படுவதற்கு முன்னாலே ஏற்பட்ட பிரச்சினையைப் பொறுத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான விவரங்களைச் சேகரித்து விடை அளித்திருக்கிறார்கள் இப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புதிய கேள்வியை

@160-162 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

எழுப்பியிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி அவர்கள் தனிக் கேள்வி போட்டால், அதற்குப் பிறகு நடைபெற்றவைகளைப்பற்றி விவரங்கள் சேகரித்துத் தருகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இங்கே வாடகை நிர்ணயிப்பது மட்டுமல்லாமல், கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களைப் புதிப்பித்து அதிகமான வாடகைகள் பெறுகின்ற நிலைமைகளை அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : ஏற்கெனவே அந்தக் கடைகளிலே இருந்துகொண்டிருப்பவர்கள், அந்த இடங்களை விடுகின்ற நிலையிலே இல்லாத காரணத்தினால், இப்படிப்பட்ட சிக்கல்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கைகள் அற நிலையத் துறையிலே எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இது போன்ற ஆலயங்களில் அதையொட்டி கடைகள் அமைக்கப்பட்டுள்ளதால், ஆலயத்தின் தோற்றத்தை, கோபுரத்தை மறைக்கும் அளவுக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அங்கேயுள்ள நுழைவாயில் கோபுரம், கம்பீரமான தோற்றம், கலை எழில் ஆகியவைகள் எல்லாம் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு பல இடங்களிலே கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அது குறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இது போன்ற ஆலயங்களில் கோபுர வாயில்களிலெல்லாம், நுழைகின்ற அந்த இடங்களிலே அதை மறைப்பது அல்லது அங்கே நுழைகின்ற, போகின்ற பக்தர்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்ற வகையிலேயெல்லாம், பல இடங்களிலே வாடகைக்கு விடப்பட்டிருக்கின்ற நிலைமைகளைப்பற்றி அறநிலையத் துறை ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலேயே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்ட காரணத்தினாலே, அவர்கள் சட்டபூர்வமாக ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அப்படிப்பட்ட இடங்களிலே இருப்பவர்களை அகற்றி தூய்மையாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அரசின் விருப்பத்தை அறநிலையத் துறைக்குத் தெரிவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட அழகைக் கெடுக்கின்ற அல்லது தூய்மையைக் கெடுக்கின்ற அல்லது ஆலயத்தின் முன் தோற்றத்தை மறைக்கின்ற கடைகளை அகற்ற, அப்புறப்படுத்த, அறநிலையத் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.